## திராவிட இயக்க இதழ்கள் - ‘இலக்கியம்’




பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரையின் தலைமகன் ‘சுரதா’ எனும் சுப்புரத்தின தாசன் நடத்திய இதழ்களில் ஒன்று ‘இலக்கியம்’.

இது 1958-ஆம் ஆண்டு முதல் சுரதாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாத இதழ் ஆகும். தமிழ்க் கவிதை வளர்ச்சிக்காகவே சுரதா தன் வாழ்நாளில் ஐந்து இதழ்களை நடத்தினார். அதில் இரண்டாவது இதழ் ‘இலக்கியம்’.

இதழ் முழுக்கவே கவிதைகள்தான். இதழின் முகப்புப் பக்கம் முதலே கவிதைகள் இடம்பிடித்துள்ளன.

திராவிட இயக்க இதழ்களுக்கே உரிய வள்ளுவர் ஆண்டு, தமிழ் மாதங்கள் ஆகியவை இதழின் பெயருக்குக் கீழே அச்சிடப்பட்டுள்ளன. மேலும் இந்த இதழ் வெளிவந்த பருவகாலத்தையும் அச்சிட்டு, புதுமை செய்துள்ளது.

இதையெல்லாம் பார்க்கும்போது, “சுரதா வெறும் புலவர் மாத்திரமல்ல. கவிஞர் மாத்திரமல்ல. தந்தை பெரியார் அவர்களால் தயாரிக்கப்பட்ட சுயமரியாதைப் போர்வாள்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியது எவ்வளவு பொருத்தம் என்பது புரிகிறது..

## :ப்ளாஷ்பேக்





கவிஞர். சு.த.மூர்த்தி

### மறக்க முடியாத ஒரு நிகழ்வு!

2003-ஆம் ஆண்டு திருநெல்வேலி இந்தியா சிமெண்ட்ஸ் விருந்தினர் விடுதியில், உயிரனைய தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். அப்போது நான், கழக மாவட்டப் பிரதிநிதியாக இருந்த நேரம். தலைமைக் கழகச் சொற்பொழிவாளராக, மதுரையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு சொற்பொழிவாளராக முறையாகப் பதிவு செய்து தலைவரிடம் வாழ்த்துப் பெற்றேன். தொடர்ந்து மாவட்ட இலக்கிய அணித் தலைவர், மாவட்ட இலக்கிய அணித் துணை அமைப்பாளர் என்று கழகப் பணிகள் போய்க் கொண்டிருந்தாலும், பல இலக்கிய நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் என்று வலம் வந்தாலும், கழகச் சொற்பொழிவாளர் என்பதில்தான் கூடுதல் பெருமை கொள்கிறேன்.

– கவிஞர்.சு.த.மூர்த்தி, எம்.ஏ.,
தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,
திருநெல்வேலி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நாடகத்தில் மறுமலர்ச்சி!

1951-ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ஆம் தேதி திருச்சி வானொலியில், ‘நாடகத்தில் மறுமலர்ச்சி’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார் பேரறிஞர் அண்ணா. நாடகத் துறையில் திராவிட இயக்கம் குறிப்பாக, தி.மு.க. ஏற்படுத்தியிருந்த மகத்தான மாற்றங்கள் குறித்து அந்த உரையில் விவரித்து இருந்தார் அண்ணா. அண்ணா, கலைஞர், பாரதிதாசன் போன்ற முன்னணித் தலைவர்கள் மட்டுமின்றி, ப.கண்ணன், இராதாமணாளன், புதுவை சிவம், சா.குருசாமி, திருவாரூர் தங்கராசு, பாவலர் பாலசுந்தரம், கவிஞர் முடியரசன், சொர்ணம், ஏ.எஸ்.வேணு எனப் பெரும் படையே அக்காலத்தில் நாடக எழுத்தாளர்களாகப் புகழ்பெற்று விளங்கினர்..

# மாநாடு

ர.பிரகாசு 39

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## திராவிட நாகரிகம் மேலானது!

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், மதராஸ் மாகாணத்தில் ‘திராவிட நாடு’ கோரிக்கை வலுத்து வந்தது. அப்போது, இந்திய விவகாரங்களுக்கான அமைச்சரின் செயலராக, சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் நியமிக்கப்பட்டார். இனி ‘திராவிட நாடு’ அடைவது எளிது என்று மகிழ்ச்சியோடு பெரியார் உள்ளிட்ட நீதிக்கட்சித் தலைவர்கள், அவரை லண்டனுக்கு வழியனுப்பி வைத்தனர். ஆனால், 1940-ஆம் ஆண்டு மார்ச் மாதம் கராச்சியில் இருந்து, சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் புறப்பட்ட விமானம், அடுத்த 6 மணி நேரத்தில் ஓமன் பகுதியில் மாயமானது.

சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் விமான விபத்தில் இறந்துவிட்டதாக இங்கிலாந்து அரசு அறிவித்தது. தன் மனைவி, தாய் இறந்தபோது கூட அழாத பெரியார், சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் மறைவுச் செய்திகேட்டு கதறி அழுதார், நொறுங்கிப் போனார். ஆனாலும் ‘திராவிட நாடு’ இலட்சியத்தை விட்டுவிடவில்லை.

**தன் மனைவி, தாய் இறந்தபோது கூட அழாத பெரியார், சர்.ஏ.டி.பன்னீர்செல்வத்தின் மறைவுச் செய்திகேட்டு கதறி அழுதார், நொறுங்கிப் போனார்.**

அடுத்த மூன்றாவது மாதத்தில், 02.06.1940 அன்று காஞ்சியில் திராவிட நாட்டுப் பிரிவினை மாநாட்டைக் கூட்டினார்.

கிரியப்ப முதலியார் சத்திரத்திலிருந்து காலை 8.30 மணிக்கு, தலைவர்கள் புடைசூழ, பாண்டு வாத்தியங்கள் முழங்க பேரணி புறப்பட்டு, 9.30 மணிக்கு மாநாட்டுத் திடலான கண்ணன் டாக்கீசுக்கு வந்தடைந்தது. டி.பி. வேதாசலம். மாநாட்டைத் திறந்து வைக்க, காஞ்சி ஏ.கே.தங்கவேல் வரவேற்புரை ஆற்றினார். மாநாட்டுக்குத் தலைமையேற்ற சேலம் வழக்கறிஞர் ஜே.பி.நெட்டோ நீண்டதொரு உரையாற்றினார்.

“ஆரிய வர்க்கத்திற்கு முன்னும் பின்னும் திராவிடர்கள் எவ்வளவு நாகரீகம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதையும், ஆரியர்கள் எந்த நிலையில் இருந்தார்கள் என்பதையும், சரித்திரத்தில் இருந்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். திராவிட நாகரிகத்திற்கு மேலானது ஆரிய நாகரிகம் என்று சொல்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது! ஆரியர்கள் இந்நாட்டில் புகுவதற்கு முன்பு, திராவிடர்களிடத்தில் பிரிவினை என்பதே இல்லை. ஒரு கூட்டத்தார் பாடுபடுவதும், ஒரு கூட்டத்தார் உண்டு கொழுப்பதும், திராவிடச் சமூகத்தின் பழக்கத்திலே இல்லாதது” என்று காட்டமாக இருந்தது அவரது உரை.

அதன்பிறகு, திராவிட நாட்டின் பிரிவினைப் படத்தைப் பெரியார் திறந்துவைத்து, அதற்கான காரண- காரியங்களை விளக்கினார். நண்பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு மீண்டும் மாநாடு கூடியவுடன்,

‘திராவிட ரத்தினம் சர் ஏ.டி.பன்னீர்செல்வம் மறைவுக்கு இரங்கல்’, ‘பள்ளிகளில் கட்டாய இந்திப் பாடத்தை நீக்கிய பிரிட்டிஷ் அரசுக்கு நன்றி’ உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் மூன்றாவது தீர்மானம் மிக முக்கியமானது.

‘ஆரிய நாட்டுடன் வெகு காலமாய் இணைந்திருப்பதில், திராவிடருக்கு எவ்வித முன்னேற்றமும் இல்லாமல், ஆரியர்களே முன்னேறிக் கொண்டு வந்துள்ளனர். திராவிட மக்களுடைய உழைப்பை ஆரியர்கள் அனுபவித்துக் கொண்டுள்ளனர். எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் பர்மா, சிலோனைப் போல திராவிட நாட்டையும் (சென்னை மாகாணம்) தனி ஸ்டேட் ஆக்கித் தர வேண்டும்’ என்பதுதான் அந்தத் தீர்மானத்தின் சாராம்சம்.

மாலையே மாநாடு முடிந்தது, ஆனால், கூட்டம் கலையவில்லை. ஆம், அன்று மாலையே காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் பத்தாயிரம் பேர் திரண்டிருந்த அந்தக் கூட்டத்தில், ‘திராவிட நாடு பிரிவினை’ மாநாட்டின் நோக்கம், தீர்மானங்களை விளக்கி தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் பேசினர். காஞ்சி தந்த அவ்வெழுச்சி இன்னும் தணியவில்லை, மாநில சுயாட்சியாய் இன்றும் மிளிர்கிறது!

...கூட்டம் திரளும்

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 39

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## ‘தமிழ்ச் செல்வங்களுக்கு, தந்தை பெரியார்!’

சினிமா, இலக்கியம், அரசியல் எனத் தமிழ்நாட்டளவிலும், இந்திய ஒன்றிய அளவிலும் தந்தை பெரியார் அதிகம் விவாதமாகும் காலகட்டமாக இந்தக் காலகட்டம் திகழ்கிறது. ஆதிக்க எதிர்ப்பு மரபின் பிரதிநிதியாக, பெரியார் இருப்பதால், சாதி-மதப் பிற்போக்குத்தனங்கள் அதிகரித்து வரும் இந்துத்துவா காலகட்டத்தில் அதிகம் விவாதிக்கப்படுகிறார். இதன் காரணமாக, பெரியார் மீது வெளிப்படும் எதிர்ப்பையும் வெறுப்பையும் எதிர்கொள்ள, ‘பெரியாரியம்’ பக்குவப்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடுதான் பல்வேறு புலங்களில் ‘பெரியார்’ குறித்து வெளிப்படும் கலை, இலக்கிய, அரசியல் படைப்புகள்.

.தந்தை பெரியாரை இளம் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கத்தில், 1990-ஆம் ஆண்டு வெளிவந்த நூல் காவியப் புலவர் பண்ணன் எழுதிய ‘தமிழ்ச் செல்வங்களுக்கு, தந்தை பெரியார்’. கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் கழித்து, மறுபதிப்புக் கண்டிருக்கிறது. ‘விடியல் பதிப்பகத்தார்’ இந்நூலை வெளியிட்டுள்ளனர். பெரியாரின் சமகாலப் பொருத்தப்பாட்டினை இந்நூலின் மறுபதிப்பைக் கொண்டும் உணரமுடியும்.




சாமி சிதம்பரனார் எழுதிய, ‘தமிழர் தலைவர்’ நூலின் சாராம்சத்தைச் சுருக்கப்பட்ட வடிவில், சுய அனுபவக் கலவையுடன், எளிய மொழிநடையில், 130 பக்கங்களில் நமக்களிக்கிறார் புலவர் பண்ணன். ‘பெரியார்’ திரைப்படம் பார்ப்பதை விட, குறுகிய நேரத்தில் படித்து முடித்துவிடக் கூடிய புத்தகம் இது.

சாமானியருக்குப் பெரியாரை எளிமையாக அறிமுகம் செய்யும் வேலையைச் சிறப்புறச் செய்கிறது இந்நூல். தமிழினம் ஆண்டாண்டு காலமாகச் சந்தித்த சாதிய அடிமைத்தனத்தையும், மூடநம்பிக்கை நிரம்பிய பிற்போக்குத்தனத்தையும் ‘பெரியார் ஒருவரே’ உணர்ந்தார் என்ற கவிதையுடன் தொடங்கும் இந்நூலில், 30 அத்தியாயங்களில், பெரியாரைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான நிகழ்வுகளை விவரிக்கிறார் பண்ணன்.

**‘தமிழ்ச் செல்வங்களுக்கு, தந்தை பெரியார்’ என்ற இந்நூலின் மூலம் மிகச் சுருக்கமாக, எளிமையாக, அதே சமயத்தில் முழுமை பெற்ற சித்திரமாகப் பெரியாரை நமக்கு அறிமுகம் செய்கிறார் பண்ணன்.**

தி.க.-விலிருந்து பிரிந்து பேரறிஞர் அண்ணா தி.மு.க.வைத் தொடங்கிய பிறகான காலகட்டத்தை மிகவும் மென்மையான நடையிலேயே விவரிக்கிறார். புலவர் பண்ணனின் தி.மு.க. சார்பு நிலை இதில் வெளிப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா மறைந்தபோது, தந்தை பெரியார் தன்னுடைய தளபதிக்கு ஆற்றிய உணர்வுப் பூர்வமான அஞ்சலி, பெரியாரின் மறைவுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அளித்த அரசு மரியாதை ஆகியவற்றிற்குப் பின்னணியிலிருந்த தி.மு.கழகத் தொடர்பை, பண்ணனின் இந்நூல் தெரிவிக்கிறது.

பெரியார் குறித்து, திராவிட இயக்க ஆதரவுப் பார்வை கொண்டவரின் வரலாற்றுப் பதிவாக இந்நூலைக் குறிப்பிடலாம். பண்ணனின் ‘திராவிட அரசியல் வரலாறு’ புத்தகத் தொடரின் முதல் பாகமாக இது வெளியாகியிருக்கிறது. இதன் அடுத்த பாகங்களாக, ‘ப.நா.வுடன் 16 ஆண்டுகள்’ எனும் நூலும், ‘தொண்டின் வடிவம் எங்கள் சாமி’ என்ற நூலும் வெளியாகியிருக்கின்றன. திராவிட இயக்க ஆர்வலர்கள் ஒரு முறையேனும் படித்தறிய வேண்டிய பல்வேறு தகவல்களை இந்த மூன்று புத்தகங்களும் கொண்டுள்ளன.


‘தமிழ்ச் செல்வங்களுக்கு, தந்தை பெரியார்’ என்ற இந்நூலின் மூலம் மிகச் சுருக்கமாக, எளிமையாக, அதே சமயத்தில் முழுமை பெற்ற சித்திரமாகப் பெரியாரை நமக்கு அறிமுகம் செய்கிறார் பண்ணன்.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

671

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.